

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2025) சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி அருகில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம், பார்வையாளர் இருக்கைகளுடன் கூடிய ஹாக்கி மைதானம், 2 பாக்ஸ் கிரிக்கெட் மைதானம் அடங்கிய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்கான முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்தயாநிதி மாறன், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர்ஜெ.மேகநாத ரெட்டி, மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2025) சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி அருகில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில் மதுரை மாவட்டம் சோழவந்தான், தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் மற்றும் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ஆகிய இடங்களில் தலா 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ”முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன்(சோழவந்தான்), ஊர்வசி.செ.அமிர்தராஜ் (திருவைகுண்டம்), எம்.சி.சண்முகையா (ஒட்டப்பிடாரம்), எஸ். மாங்குடி (காரைக்குடி), காரைக்குடி மாநகராட்சி மேயர் சோ.முத்துத்துரை, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி ஆஷா அஜித், (சிவகங்கை), க.இளம்பகவத், (தூத்துக்குடி), திருமதி மா.சௌ.சங்கீதா (மதுரை), மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### ‘நீட்’ நடைமுறைக்கு எதிரான சட்ட முன்வடிவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்றுத் தாரீர்!

# கோயம்புத்தூரில் ‘எய்ம்ஸ்’ மருத்துவமனை - 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள்!

## தமிழ்நாடு தொடர்பான மருத்துவத்துறை கோரிக்கைகள் – ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சரிடம் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 5-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நேற்று (4.3.2025) புதுடெல்லியில், ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா அவர்களிடம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாடு தொடர்பான மருத்துவத் துறையின் கோரிக்கைகள் வழங்கினார்கள். அதன் முக்கிய விபரங்கள் பின்வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு. ஆளுநர் ஒப்புதலுடன் ஒன்றிய அரசக்கு அனுப்பபப்பட்டுள்ள நீட் நடைமுறைக்கு எதிரான சட்ட முன்வடிவுக்கு மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தரக் கோருதல்.

கோயம்புத்தூரில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்க அனுமதி கோருதல்

தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் நிறுவுதல்

தமிழ்நாட்டில் 24 நகர்ப்புற மற்றும் 26 ஊரக ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 500 துணை சுகாதார நிலையங்களுக்கு அனுமதி வழங்க கோருதல்

தேசிய மருத்துவ ஆணையத்தின் தேசிய வெளியேறும் தேர்வு விதிமுறைகள், 2023 மீதான ஆட்சேபணை தெரிவித்தல்

பொது கலந்தாய்வுத் தொடர்பாக தேசிய மருத்துவ ஆணையத்தின் பட்டப்படிப்பு மருத்துவக் கல்வி விதிமுறைகள் 2023க்கு ஆட்சேபணை தெரிவித்தல்.

தேசிய மருத்துவ ஆணையத்தின். “புதிய மருத்துவ நிறுவனங்களை நிறுவுதல். புதிய மருத்துவப் படிப்புகளைத் தொடங்குதல், தற்போதுள்ள படிப்புகளுக்கான இருக்கைகள் அதிகரிப்பு &மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டு விதிமுறைகள், 2023” மீதான ஆட்சேபணை தெரிவித்தல்

ரூ.447.94 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் புற்றுநோய் பராமரிப்பு சிகிச்சை மற்றும் சேவைகளை மேம்படுத்துதல்.

22 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ. 603.45 கோடி மதிப்பீட்டில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவுகளை மேம்படுத்தி திறன் ஆய்வகங்கள் அமைத்தல்.

மேற்காணும் கோரிக்கைகள் அடங்கிய மனுவை, அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சரிடம் வழங்கி, அவற்றை வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார். தமிழ்நாடு இல்லம் உள்ளுரை ஆணையர் ஆஷிஷ் குமார், தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

### அமைச்சர் முனைவர் க.பொன்முடி, டி.ஆர்.பாலு எம்.பி, பேராசிரியர் சுப வீரபாண்டியன், அமைச்சர் மா. சுப்பிரமணியன் சிறப்புரை!

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் முதல்வர் பிறந்த நாள் மாபெரும் வாழ்த்தரங்கம்!

## காரம்பாக்கம் க. கணபதி முன்னிலை! ச. சங்கர் கணேஷ் எம்.சி. நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை மார்ச்:5

சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி தி.மு.க சார்பில் கழகத் தலைவர்,முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு’ புதிய உலகைப் படைத்த பூம்புகார் புதல்வர்’ வாழ்த்தரங்கம் மற்றும் நலதிட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி போரூர், லட்சுமி நகர் விரிவு விளையாட்டுத் திடலில் ( 5.03.2025 இன்று புதன்கிழமை) மாலை 5.00 மணியளவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், 151வது வார்டு மாமன்ற உறுப்பினர்ச.சங்கர்கணேஷ் தலைமையில் நடைபெறுகிறது.

மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ, மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், மண்டல குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அய்யப்பாக்கம் அ.ம.துரைவீரமணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தலைமை செயற்குழு உறுப்பினர் அருணாச்சலம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வ. செல்வக்குமார்,வட்டக் கழக செயலாளர் அ.மோசஸ்,மாவட்ட பிரதிநிதிகள் விஜயன் மற்றும் ஆர்.சேகர், வட்ட கழக நிர்வாகிகள் செ.இராமையா,சிவா, முரளி,கு.விமலாசேகர், பன்னீர்செல்வம், கோ.கண்ணதாசன், முரளி கிருஷ்ணன், ப.சரவணன் மோ.சுந்தர்,குமார்,மு. மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். தனசேகர், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பளார் சண்முகம்,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ. செந்தில்குமார்,பகுதி அமைப்பாளர்கள் ப.ரகு, எம்.லோகேந்திர பாபு, இலக்கிய துணை அமைப்பாளர் இரா. ராஜேஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இம்மாபெரும் வாழ்த்துரங்கில் கழக துணை பொதுச் செயலாளர், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி,திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், கழக பொருளாளர், நாடாளமன்ற குழுத் தலைவர் டி. ஆர்.பாலு எம்.பி,மாவட்ட கழகச் செயலாளர்,அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ, எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, துணை மேயர் மு. மகேஷ் குமார், தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பி.டி. பாண்டி செல்வம்,தலைமை செயற்குழு உறுப்பினர் க. தனசேகரன்,மாநில வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம்,

மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் எஸ்.பத்மபிரியா, மாநில மகளிரணி சமூக வளைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், தலைமை செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க. சோமு, தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பி.மணிமாறன், மாவட்ட கழக அவைத் தலைவர் எஸ். குணசேகரன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் த. விஸ்வநாதன், மு. மனோகரன்,பா. வாசுகி பாண்டியன், பொருளாளர் எஸ். பாஸ்கரன்,பகுதி கழக செயலாளர்கள் கே. கண்ணன்,மு. ராஜா,எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், எஸ்.வி. ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், துரைகபிலன், அரிமா. சு.சேகர்,

ஒன்றிய கழக செயலாளர் வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம். ீரீதர், திருமதி. வீரகனிமொழி, சைதை மா. அன்பரசன், உ.துரைராஜ், எஸ். அரிகிருஷ்ணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ. விஜயபாலா, வி. ராஜேஷ், எஸ். பி.அருள், கே. குமரேசன், சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் செ. இரவி,

எம்.வினாயகமூர்த்தி, ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டியன், கா.வீ. தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ், வேளச்சேரி. வே. ஆனந்தன்,சைதை சாதிக்,த. கனிமொழி, மதுரவாயல் தெற்கு, வடக்கு பகுதி, வில்லிவாக்கம் ஒன்றிய கழக நிர்வாகிகள் பி.எம். செல்வராஜ், வே.மதியழகன் இரா. பால்பாண்டியன் எஸ். பாரதி அண்ணாவேலவன், கே.ராஜீ, எஸ்.கர்ணல், தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ஆ. மாலினி, ம. உதயகுமார், என். ஜெயச்சந்திரன், ஏ.எம்.யுவராஜா, ஆர். கௌரிசங்கர், ப. கிரிஜா, என்.ரவி,

மதுரவாயல் தெற்கு, வடக்கு பகுதி, வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ் ராஜ் த.ரமேஷ் சி.சுந்தர் தி.சார்லஸ் ஆ.ராதா செல்வம், எஸ்.ஜி.மாதவன், எம்.இ.ஸ்டாலின், எம். கே.பி.அண்ணதாசன், எம். எம். ஜெயரத்தினம், சி. சசிக்குமார், ப.ஆலன், எம். ரூபன், மாமன்ற உறுப்பினர்கள் ஹேமலதாகணபதி, செல்விரமேஷ், சாந்திராமலிங்கம், ரமணி மாதவன், மாவட்ட பிரதிநிதிகள் க. கைலாசம் இரா.ராஜேந்திரன் எம்.எல். நாதன், கோ. இராமலிங்கம்,எத்திராஜ், ராமகிருஷ்ணன், ரவி,திருநாவுகரசு நாராயணன், சிவலிங்கம், உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

மதுரவாயல் தெற்கு வடக்கு வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் பா.மணிவண்ணன், நரேஷ், இசக்கி, விஜயகுமார், அ. கோபிநாத், ஆர்.மணிகண்டன், பி.மணிகண்டன், ஆர். தியாகராஜன், ஆர். வினோத், என்.விவேக், எம். கிரி [எ] கணேசன் பா.தனசேகர் மா.ஜெகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.





முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நேற்று (04.03.2025) புதுடெல்லியில், ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா அவர்களிடம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழ்நாட்டில் உள்ள மருத்துவத்துறை தொடர்பான கோரிக்கைகள் வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.ப.செந்தில்குமார், தமிழ்நாடு இல்லம் உள்ளுரை ஆணையர் ஆஷிஷ் குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

### தயாநிதி மாறன் எம்.பி., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., வே.வாசு, கூ.பி.ஜெயின், பா.ஸ்ரீராமுலு முன்னிலை! புரசை கா.சேகர் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் - 300 மகளிர்க்கு புடவைகள் - சீருடைகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை, மார்ச். 5,

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் 300 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு புடவைகள் மற்றும் சீருடைகள் வழங்கும் விழா இன்று (5.3.2025புதன்கிழமை) மாலை 4.30 மணிக்கு சென்னை, அயன்புரம், டபிள்யூ. பி.ஏ. சௌந்தரபாண்டியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள காமராஜர் அரங்கத்தில் நடைபெறுகின்றது.

சுய உதவிக் குழுக்கள் 300 மகளிர்களுக்கு புடவை மற்றும் சீருடைகள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர் பாபு வழங்குகிறார்.

தயாநிதி மாறன் எம்.பி., அ.வெற்றி அழகன் எம். எல்.ஏ, வே.வாசு, கூ.பி. ஜெயின்,எம்.சி., பா.ஸ்ரீராமுலு, எம்.சி., லதா வாசு எம்.சி., டி.வி.செம்மொழி எம்.சி., சாவித்திரி ஸ்ரீவீரராகவன், வானவில் விஜய், சுதா தீனதயாளன், எம்.சி., ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டவிள்யூ. அமுல், நா.அறுவுடைய நம்பி, எ.வேதா, ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை, ம.ஜெகதீவரன், டி.ஜானகிராமன், வி.சபாபதி, வ.ரமேஷ்பாபு, மு.பரமானந்தம், டி. ஸ்டாலின், ந.குமார்,எ.சத்தியநாராயணன், கி.ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ்.ரைபாபு, கே.ராஜா, வி.ஆர்.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.குப்புசாமி, என்.பி. செல்வம், டி.ஆறுமுகம், கே.யுவராஜ், கே.சிவா, ஆர். செல்வம், கே.பிரபு, ஜெ. நவீன் குமார், ஆர்.வேலாயுதம், மணிமாறன், சி.செந்தில் குமார் என்கிற பிரகாஷ், எஸ்.ஆனந்த் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஓம்.புரசை கா.சேகர் தலைமை தாக்குகிறார்.

மேலும் இந் நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு தலைவர் ப.ரங்கநாதன், ஓ. நாகலிங்கம், கே.எஸ். ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே. எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, வே.உமா காந்தன், சி.மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி , எல்.பி.எப். வரதன், வழக்கறிஞர் இந்ரஜித், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், ஏ.புனிதவதி எத்திராசன், இசட் ஆசாத், சொ.வேலு, சரிதா மகேஷ், குமார், பா.ஸ்ரீராமுலம், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி. சுதாகர், எஸ்.முரளி, எஸ்.. இராஜசேகர், ஜெ.எஸ். பிரபு, வி.து.இராமமூர்த்தி, கலைச்செல்வி, ஐ.சி.எப். மு.சுரேஷ் பாபு, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகு பாபு, பூ.சத்தியேந்திரன், பிரேமா தயாளன், ஆர்.இருதயமேரி,

வழக்கறிஞர் ஜி.அய்யனார், ஆர்.மோகன்ராஜ், டி.எச்.செல்வராஜ், உ.பிரசன்னவேலன், வழக்கறிர் பா.சுந்தர், எம்.சக்திவேல், ரா.காமேஸ்வ ரன், ஆர்.கற்பகம், எஸ்.காந்தன், ஆ.உதயன், எல்.பி.எப். வ.பசுபதி, ராராஜலிங்கம் என்கிற சின்னா, மு.முத்துப்பிள்ளை, எஸ்.தியாகு, ஆ. கணேசன், சீ.அன்பழகன், வி.சங்கர், சி.ரவிக்குமார், என்.ஜெயவேலு, ப.கோவிநாத், ஆர்.மாறன், எஸ்.தினகரன், ஏ.வி.ஜான் பால் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். நிறைவாக 97 வது வட்டக் கழகச் செயலாளர் விக்னேஷ் சீனிவாசன் நன்றி கூறுகிறார்.

# ஜெர்மனி நாட்டில் செவிலியர்களாக பணிபுரிய விண்ணப்பிக்கலாம்!

சென்னை, மார்ச்.5-

ஜெர்மன் நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் பணி புரிவதற்க்கு ஆறு மாதம் பணி அனுபவம் பெற்ற 35 வயதிற்க்குட்பட்ட, டிப்ளமோ மற்றும் பட்டதாரி ஆண்/பெண் செவிலியர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு B1,B2 நிலையில் இலவசமாக ஜெர்மன் மொழி பயிற்றுவித்து மாத சம்பளமாக சுமார் 2 இலட்சம் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ளவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணபத்துடன் கல்வித் தகுதி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் omclgerman2022@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15.03.2025க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணிவிவரங்களை அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளமான www.omcmanpower.tn.gov.in மற்றும் 044 22505886/ 63791 79200 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.




தி.மு.க.
இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய-நகர-பகுதி-பேரூர்
புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்-7 க்கு உட்பட்ட திருவாரூர் மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய-நகர-பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.03.2025 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | திருவாரூர் | மலர் மஹால், வடசேரி சாலை, மன்னார்குடி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 04-03-2025

